**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.132/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | வீரமணி | Prosecution | LW-4 as PW2. |
| Father Name | சேகர் | Defence | |
| Village | வைத்தீஸ்வரன்கோயில் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 33/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **20.05.2026.**

**எதிரி ஆஜரில்லை மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து கோழிகடை வைத்து வேலை செய்து வருகிறேன். கடந்த **17.10.2022** ம் தேதி இரவு **10.00** மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். திடீரென மடார் என்று சத்தம் கேட்டது. நான் வெளியே வந்து பார்த்தேன். அப்போது மணிகண்டன் என்னும் நபர் அடிபட்டு கீழே கிடந்தார். அவரை ஆட்டோவின் மூலம் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். மணிகண்டன் மீது டாடா ஏசி மோதியதாக கூறினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் ஆட்டோ ஓட்டும் ஸ்டேன்டில் தான் அடிபட்ட நபரும் ஆட்டோ ஓட்டுகிறாரா என்றால் ஆமாம். நான் பால் வண்டி வைத்துள்ளேனா என்றால் இல்லை கோழிக்கடை தான் வைத்துள்ளேன். அடிபட்ட நபரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த விபத்துக்குள்ளான வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. இந்த விபத்து யாருடைய கவன குறைவால் நடந்தது என்றால் தெரியாது. விபத்தில் இறந்து போன நபர் முன்னால் போன லாரியை முத்தும் போது தான் விபத்து நடந்தது என்றாலும் எதிரியால் ஏற்பட வில்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்காத நிலையில் விபத்து அடிபட்ட நபர் எனக்கு வேண்டியவர்

என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**